கொழும்புப் பல்கலைக்கழகம், இலங்கை

சட்ட பீடம்

சட்டமாணிப் (மீள்) பரீட்சை, (நிகழ்நிலை) ஆண்டு 1 – 2020

(2021 இல் நடைபெற்றது)

# சட்ட வழிமுறை

(மூன்று மணித்தியாலம்)

வினாக்களின் மொத்த எண்ணிக்கை : 06

**<u>மூன்று</u>** (03) வினாக்களுக்கு **<u>மட்டும்</u>** விடையளிக்க.

(தெளிவற்ற கையெழுத்துக்குப் புள்ளிகள் குறைக்கப்படும்.)

---

1. 'சட்டம்' என்கின்ற பதமானது தனித்ததொரு வரைவிலக்கணத்தை எதிர்த்து நிற்கின்றது. சில அறிஞர்களுக்கு, சட்டமானது சமூக இயல் நிகழ்வொன்றாகவும், ஏனையவர்கள் அந்த முன்மொழிவுடன் உடன்படாதபோதிலும் அது மக்களின் சமூக எதிர்பார்ப்புக்களை நிறைவுசெய்தல் வேண்டும்.

   நீர் உடன்படுகின்றீரா? போட்டியிடும் சமூக எதிர்பார்புக்களை நிறைவு செய்யும் வகையில் ஆக்கப்பட்ட சட்டமொன்றையும், அவ்வாறு அவசியமற்ற மற்றொரு சட்டத்தையும் மேற்கோள் காட்டி மேற்கூறிய கூற்றினை ஆராய்க. தொடர்புடைய சிந்தனைப் (*schools of thought*) பிரிவுகளின் அடிப்படையில் உமது விடையினை ஆதாரப்படுத்துக.

2. நிலையறி விசாரிப்புசார் (*Inquisitorial*) முறைமையானது குறித்த செயன்முறைமையினை மேற்பார்வை செய்யும் நீதிபதிக்கு அதிக தத்துவத்தினை வழங்குகின்ற அதேவேளை, எதிரிடைவாத (*Adversarial*) முறைமையானது வழக்குத்தொடுனர் மற்றும் எதிர்வாதி ஆகியோருக்கிடையில் போட்டிச் செயன்முறை ஒன்றின் மூலம் விடயமொன்றினது உண்மையினை அறிய முயற்சிக்கின்றது.

   இவ்விரு முறைமைகளில் நீதிபதியினது வகிபங்குடன் குறிப்பாக தொடர்புறுத்தி மேற்கூறிய கூற்றின் வலிதுடைமை மீது நுணுக்கமாகக் கருத்துரை செய்க.

3. 'சீலானிகா' என்ற அரசானது வேறுபட்ட கலாசார குழுக்கள் மற்றும் இனத்துவங்களைக் கொண்டுள்ளது. 'தொங்கோ' இன மக்கள் சிந்துமாலா ஆலயத்தின் பக்தர்களாயிருப்பதுடன், 12 முதல் 55 வயதிற்குட்பட்ட தொங்கோ பெண்களை தூய்மையற்றவர்களாகவும் துப்புரவற்றவர்களாவும் அவர்கள் கருதுவதனால் தங்களது வரலாற்றுச் சிறப்புமிக்க சிந்துமாலா ஆலயத்திற்குள் உட்செல்ல அனுமதிக்கக் கூடாதென நம்புகின்றனர். பெண்களுக்கு எதிரான

பாரபட்சங்களை தடைசெய்வதற்கான 2021ஆம் ஆண்டின் 10ஆம் இலக்கச் சட்டத்தை சீலானிகா அரசாங்கமானது இயற்றுகின்றது.

இச்சட்டத்தின் பிரிவு 3 ஆனது, *'உடலியல் காரணிகளின் அடிப்படையில் எந்தவொரு பெண்ணும் அல்லது சிறுமியும் பாரபட்சமான நடாத்துகைக்கு உட்படுத்தப் படக்கூடாது'* என்று ஏற்பாடு செய்கின்றது.

2021 ஆகஸ்ட் மாதத்தில், 1500 ஆண்டுகால அதிமேன்மையைக் கொண்டாட சமய மாநாடொன்றினை சிந்துமாலா ஆலயத்தில் நடாத்துவதற்கு மதகுருமார் பேரவையானது ஏற்பாடு செய்தது. சாட்டுதல் செய்யப்படுகின்றதான துப்புரவற்ற தன்மை காரணமாக, சிந்துமாலா ஆலயத்தின் பாரம்பரியமானது பெண்களை வளாகத்திற்குள் உட்செல்ல அனுமதிக்காது என்பதாக மதகுருமார் உறுதியாக பிரகடனஞ் செய்தனர்.

2021 செப்டம்பர் மாதத்தில், ஆலயத்திற்குள் பெண்கள் உட்செல்லவதைத் தடைசெய்வதாக குறிப்பிடும் சமய மாநாட்டின் காணொளியொன்றினை வின்யா பெண்கள் அமைப்பு என்று அழைக்கப்படும் அரசு சாரா அமைப்பானது காண்பதுடன் சிந்துமாலா குருமார்கள் சட்டத்தின் பிரிவு 3இனை மீறுவதாகவும் குற்றஞ்சாட்டுகின்றது. எனினும், பேரவை மற்றும் பக்தர்கள் இந்தக் குற்றச்சாட்டை மறுப்பதுடன் பிரத்தியேக ஆண் பங்கேற்பு என்பதானது நூற்றாண்டுகளுக்கு முந்தைய பழமையானதொரு சமய நடைமுறைமை என்றும் வாதிடுகின்றனர். மேலும், தொங்கோ சமுதாயத்தின் ஆண்களும் பெண்களும் இந்த நடைமுறையினை சம்பிரதாயமாக பின்பற்றிவருவதுடன் அவர்களது பாரம்பரியத்தில் ஆழமாகவும் பதிந்துள்ளதுள்ளதெனவும் குறிப்பிடுகினறனர்.

இவ்வழக்காற்றின் வழிதுடைமை தொடர்பில் உமது ஆலோசனையை வின்யா பெண்கள் அமைப்பானது எதிர்பார்க்கின்றது. பொருத்தமான தீர்ப்புச் சட்டத்துடன் தொடர்புறுத்தி வின்யாவிற்கு ஆலோசனை கூறுக. சீலானிகாவின் சட்டமுறைமையானது இலங்கையினதைப் போன்றதெனக் கருதிக்கொள்க.

4. சட்டத்தின் வளர்ச்சியின் மீது நீதிமுறை அதிகார அறிவிப்புக்களும் அபிப்பிராயங்களும் குறிப்பிடத்தக்க தாக்கத்தினைக் கொண்டுள்ளன.

   இக்கூற்றுடன் நீர் உடன்படுகின்றீரா? இலங்கையில் பொதுச்சட்டப் பாரம்பரியம் ஒன்றான நீதிமுறை முற்றீர்ப்பின் பிரயோகத்துடன் தொடர்புறுத்தி ஆராய்க. வழக்குச்சட்ட அதிகார ஆதாரங்களால் உமது விடையினை ஆதாரப்படுத்துக.

5. கடந்த சில ஆண்டுகளாக 'ஜெமலாந்து' என்ற அரசில், பாலினம் சார்ந்த இணைய வன்முறைகள் தொடர்பான வழக்குகளின் எண்ணிக்கையானது அதிகரித்து வருகின்றது. 2021இல், ஒழுக்கக்கேடான மற்றும் ஆபாச செயல்களை ஊக்குவிப்பதைத் தடுத்து சமூக ஒழுங்கினையும் ஒழுக்கத்தினையும் பாதுகாப்பதற்கான சட்டமொன்றினை ஜெமலாந்து அரசாங்கமானது ஆக்கியது.

2021ஆம் ஆண்டின் 12ஆம் இலக்க அநாகரீக மற்றும் ஆபாசப்பட தடுப்புச் சட்டத்தின் பிரிவு 7 ஆனது
*'ஒழுக்கக்கேடான அல்லது ஆபாசமான செயலில் ஈடுபடுகின்ற மற்றும் அத்தகைய செயல்களை பிரசுரிக்கின்ற எந்தவொரு நபரும் இந்தச் சட்டத்தின் கீழ் குற்றமொன்றைப் புரிந்தவராவர்'* என்று ஏற்பாடு செய்கின்றது.

ஜெமலாந்துவினது பிரசைகளான மாயா மற்றும் ரோயா ஆகியோர் தங்களது ஓரினச்சேர்க்கை உறவினை பேணுகின்ற போது ஏற்படுகின்ற சிரமங்களை சமூக ஊடகத்தளத்தில் வெளிப்படுத்தினர். இக்காணொளியானது அதிகளவில் பரவி சர்ச்சைக்குரிய பின்னணியினை உருவாக்கியது. ஆகையால், மாயா மற்றும் ரோயா ஆகிய இருவரும் இச்சட்டத்தின் 7ஆம் பிரிவின் கீழ் குற்றஞ்சட்டப்பட்டனர். இச்சட்டத்தினால் வரையறைசெய்யப்பட்ட எந்தவொரு ஒழுக்கக்கேடான மற்றும் ஆபாச செயலையும் தாங்கள் புரியவில்லை எனவும், தங்களது துணையைத் தேர்ந்தெடுக்கும் உரிமை தங்களுக்கு உண்டு எனவும் அவர்கள் வாதாடுகின்றனர்.

இந்த வழக்கினை விளங்குகின்ற நீதிபதி நீர் எனக் கருதிக்கொண்டு, இந்த நியதிச் சட்டத்தினைப் பொருள்கோடல் செய்வதற்கு பொருள்கேடல் விதியொன்றினை நீர் தெரிவுசெய்வதுடன் அத்தேர்வினையும் நியாயப்படுத்துக. ஜெமலாந்துவினது சட்டமுறைமையானது இலங்கையினதைப் போன்றதெனவும் கருதிக்கொள்க.

6. இலங்கையின் பிணக்குத்தீர்வுக்கான மாற்றுவழி முறையின் (*Alternative Dispute Resolution*) செயல்திறன் மற்றும் செயல்பாடு குறித்து பரிந்துரைகளைச் செய்வதற்கென நீதி அமைச்சினால் நியமிக்கப்பட்ட குழுவின் உறுப்பினரொருவராக உம்மைக் கருதிக் கொள்க. அவற்றின் குறைபாடுகள், ஏதேனுமிருப்பின், அவற்றைச் சுட்டிக்காட்டி, அவற்றின் செயல்பாடுகளை மேலும் மேம்படுத்துவதற்கான பரிந்துரைகளை முன்மொழியும் அறிக்கையொன்றினைத் தயார் செய்க.

*****